# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 05 வெள்ளிக்கிழமை 18.04.2025 கதிர் 170



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel





## எம்மை நம்பி வாக்களித்த தமிழரை ஒருபோதும் கைவிடவேமாட்டோம்!

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க சத்தியம்

கொழும்பு, ஏப். 18

“எமது கட்சியை நம்பி வாக்களித்த தமிழ் மக்களை நாம் ஒருபோதும் கைவிடமாட்டோம்.” - என்று தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“வடக்கு, கிழக்கில்

7 ➤

# மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள்: உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் அரசு

## ஜி.எஸ்.பி. பிளஸைத் தக்கவைப்பது அவசியம் என்றும் முன்னாள் சபாநாயகர் கரு வலியுறுத்து



கொழும்பு, ஏப். 18

**இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அரசை வலியுறுத்தியுள்ள சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் கரு ஜயசூரிய, சர்வதேச நியமங்களுக்கு அமைவாகச் செயற்படுவது என்பது நாட்டுக்கு இழைக்கின்ற துரோகமாகாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.**

ஐரோப்பிய ஒன்றியத்தால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் மீண்டும் இலங்கைக்கு வழங்கப்பட்டது. இந்தச் சலுகையைத் தொடர்ந்து பெறுவதற்கு இலங்கை மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சிறந்த ஆட்சியியல் நிர்வாகம் என்பன உள்ளடங்கலாகப் பல்வேற விடயங்கள் தொடர்பான 27 சர்வதேச பிரகடனங்களுக்கு அமைவாக செயற்படவேண்டும்.

அதன்படி கடந்த 2022 - 2024 வரையான காலப்பகுதியில் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கையினால் இணங்கப்பட்ட கடப்பாடுகள் உரியவாறு நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்பது குறித்து மதிப்பீடு செய்வதற்காக இவ்வார இறுதியில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவினர்

7 ➤

## மாபெரும் குற்றவாளியான பிள்ளையானை தேசப்பற்றாளர் என்று கூறுவது வெட்கக்கேடு

### கம்மன்பிலவுக்கு அமைச்சர் நளிந்த பதிலடி



கொழும்பு, ஏப். 18

“பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் மிகப்பெரும் குற்றவாளி. அவரைத் தேசப்பற்றாளர் என்று உதய கம்மன்பில கூறுவது வெட்கக்கேடானது.” - என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டுக் காணாமல்

7 ➤

## பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றவரே சடலமாக மீட்பு

### உறவினர்கள் வாக்குமூலம்

வவுனியா, ஏப். 18

வவுனியா, உளுக்குளம் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யச் சென்ற இளைஞரே இரத்தக்கறைக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, பாவற்குளத்தின் சூடுவெந்தபுலவு அலைகரைப் பகுதியில் இருந்து நேற்று

7 ➤



### வரணியில் குளத்தில் மூழ்கி

## காதலன் உயிரிழப்பு; காதலி உயிர்மாய்ப்பு!





வரணி, ஏப். 18

தாமரைப் பூ பறிக்கும்போது காதலன் குளத்தில் மூழ்கி உயிரிழந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு, கவலையில் காதலி தவறான முடிவெடுத்து உயர்மாய்துள்ளார்.

7 ➤

## வாக்குறுதிகளில் ஒன்றையேனும் நிறைவேற்றவில்லை அநுர அரசு

### கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 18

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவையும் அவரது கட்சியான தேசிய மக்கள் சக்தியையும் கடுமையாகச் சாடியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற

7 ➤



# யாழில் திடீரென மாயமான சோதனைச் சாவடிகள்



கொழும்பு, ஏப் 18

யாழ்ப்பாணம் ஏ9 வீதியில் எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைக்கப்பட்ட சோதனை சாவடியும் பூநகரி வீதியில் சங்குப்பிட்டி பகுதியில் அமைக்கப்பட்ட சோதனை சாவடியுமே இவ்வாறு திடீரென அகற்றப்பட்டது.

அத்தோடு, அங்கு எவரும் கடமையில் இருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார், யாழ்ப்பாணம் மாவட்டங்களில் உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற பிரசார கூட்டங்களில் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

இதற்காக ஏ9 வீதி மற்றும் பூநகரி வீதிகள் ஊடாக ஜனாதிபதி பயணம் மேற்கொண்டார். ஜனாதிபதி வரும்போது மட்டும் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டமை மூலம் அரசாங்கம் மக்களை ஏமாற்றுகிறதா அரசாங்கம் பொலிஸாரால் ஏமாற்றப்படுகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அநுர குமார திஸாநாயக்க ஆட்சிக்கு வந்து சில மாதங்களுக்கு முன்னரும் குறித்த சோதனைச்சாவடிகள் தளர்த்தப்பட்டு சிறிது காலங்களுக்கு பின்னர் மீண்டும் அமைக்கப்பட்டது. (ஐ)

## 1500ஐ நெருங்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகள்




கொழும்பு, ஏப் 18

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் தொடர்புடைய சம்பவங்கள் தொடர்பில் 1490 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த முறைப்பாடுகள் கடந்த மார்ச் 20ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை பதிவாகியுள்ளன.

இந்த முறைப்பாடுகளில் வன்முறை தொடர்பில் 9 முறைப்பாடுகளும், சட்டத்தினை மீறியமை தொடர்பில் 1388 முறைப்பாடுகளும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் கிடைக்கப்பெற்ற 1490 முறைப்பாடுகளில் 1319 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய முறைப்பாடுகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பான அஞ்சல் வாக்களிப்பு தினங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி இந்த அஞ்சல் வாக்களிப்புகள் இம்மாதம் 24ஆம், 25ஆம், 28ஆம் மற்றும் 29ஆம் திகதிகளில் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதேநேரம் வேட்பு மனு தொடர்பாக நீதிமன்றம் உத்தரவுகளை வழங்கியுள்ள 102 உள்ளூராட்சி மன்றங்களது வாக்குச் சீட்டுகள் மீண்டும் அச்சிடப்படுவதாக அரச அச்சகம் தெரிவித்துள்ளது. (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்ட்டி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases

- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments

- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# பணி நிறுத்தத்தில் ஈடுபடும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பணியாளர்கள்



கொழும்பு, ஏப் 18

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கேபின் பணியாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தைத் ஆரம்பித்துள்ளனர். விமானத்தில் உணவு கொடுப்பனவை மறு ஒதுக்கீடு செய்வது உள்ளிட்ட பல கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கேபின் பணியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிர்வாகத்திற்கு பலமுறை தகவல் தெரிவித்துள்ளதாக தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

சரியான தீர்வு கிடைக்காததால், இந்த பணி நேரத்திற்கு ஏற்றதனை போன்று வேலை செய்யும் போராட்டத்தை ஏப்ரல் மாதத்தில் தொடங்கியதாக சங்கத்தின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

அதன்படி, அவர்கள் பணிப் பட்டியல்களின்படி பணிபுரிவார்கள் மற்றும் குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே பணியாளர் மையத்திலிருந்து வரும் அழைப்புகளுக்கு பதிலளிப்பார்கள்.

எனினும் பாதுகாப்பு மற்றும் அவசரகால நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை சங்கம் வலியுறுத்தியது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தற்போது சாதகமான வளர்ச்சியை எட்டியுள்ளது.

இந்நிலையில் கோவிட் தொற்றுநோய்களின் போது செய்யப்பட்ட கொடுப்பனவு நிறுத்தங்களை மீண்டும்வழங்குமாறு கேபின்குழு உறுப்பினர்கள் நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## இரண்டு பொருட்களுக்கு வற் வரியில் இருந்து விலக்கு! அரசாங்கம் அறிவிப்பு



கொழும்பு, ஏப் 18

பெறுமதி சேர் வரி (ஏயுவு) திருத்தச் சட்டமூலத்தின் படி, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் திரவப் பால் மற்றும் தயிர் ஆகியவற்றிற்கு வற் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு வருவாய்த் துறை தெரிவித்துள்ளது.

அதற்கமைய, ஏப்ரல் 11 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் திரவ பால் மற்றும் தயிர் மீதான வற் வரி நீக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

வற் வரி திருத்த வர்த்தமானி ஏப்ரல் 9 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதற்கு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன ஏப்ரல் 11 ஆம் திகதி கையெழுத்திட்டு ஒப்புதல் அளித்துள்ளார்.

அதன்படி, தொடர்புடைய சட்டம் குறித்த திகதியில் நடைமுறைக்கு வந்ததிலிருந்து, உள்நாட்டு வருவாய்த் துறை பல வரித் திருத்தங்களைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. (ஐ)

## மோடியின் யோசனையை பரிசீலிக்க மறுத்து விட்ட அநுர



கொழும்பு, ஏப் 18

இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சில கருத்துக்களை தெரிவித்த போதிலும், தற்போதைய நிலையில், இந்தியாவுடன்(India) நில இணைப்புத் திட்டத்தைப் பரிசீலிக்க இலங்கை மறுத்துவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

2002-2004 ஆம் ஆண்டுகளில் அப்போதைய பிரதமராக பதவி வகித்த ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் போது, இரு நாடுகளையும் இணைக்கும் நிலப் பாலம் குறித்து முதலில் விவாதிக்கப்பட்டது.

இதனையடுத்து, 2023 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக புதுடில்லிக்கு விஜயம் செய்தபோது, கூட்டு அறிக்கையில் நில இணைப்பும் குறிப்பிடப்பட்டது.

இருப்பினும், கடந்த ஆண்டு டிசம்பரில் புதுடில்லிக்கு விஜயம் செய்தபோது, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, தற்போதைய சூழ்நிலையில், இந்தத் திட்டத்தை முன்னெடுக்க மறுத்துவிட்டார் என்று தெரியவருகிறது.

இதன் காரணமாக, இந்தியப் பிரதமரின் அண்மைய வருகையின் போதும், இந்த விடயம் இலங்கையின் நிகழ்ச்சி நிரலில் உள்ளடங்கியிருக்கவில்லை.

இருப்பினும், ஒரு சந்தர்ப்பத்தில் இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் போது, பிரதமர் மோடி இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நில இணைப்பு பற்றி குறிப்பிட்டார்.

அத்துடன் தமது பயணத்தை நிறைவு செய்த பின்னரும், அவர் இந்திய விமானப்படை உலங்கு வானூர்தியில் இலங்கையிலிருந்து புறப்பட்டபோது, இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் ராமர் சேது பாலத்தை அவர் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிள்ளையான்- உதய கம்மன்பில சந்திப்பு பெரிய சதித்திட்டத்தின் ஆரம்ப புள்ளி..!



கொழும்பு, ஏப் 18

பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவருமான உதய கம்மன்பில பிள்ளையானுடன் சேர்ந்து இந்த நாட்டில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்துள்ளார்.

இருவரது செயற்பாடுகளின் பின்னால் பெரிய ஒரு சதிதிட்டம் இருப்பதாக கருதுகின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றையதினம் நிகழ்வொன்றில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

“உதய கம்மன்பில கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சரான பிள்ளையான் என்றழைக்கப்படும் சி. சந்திரகாந்தனின் சட்டத்தரணியாக செயற்படுகின்றார்.

இவர் பிள்ளையானை நேரடியாக சென்று சந்தித்தது தொடர்பாக ஊடகங்களில் தெரிவித்துள்ளார்.

இந்த இருவருக்கும் இடையிலான உறவு என்பது கடந்த காலங்களில் உதய கம்மன்பில போன்றவர்கள் இனவாத ரீதியாக இந்த நாட்டை குழப்பும் செயற்பாடுகளை முன்னின்று செயற்பட்டவர்களின் முக்கியமாக கருதப்படுபவர் அவர் இன்று பிள்ளையானுடன் இணைந்து அவரது சட்டத்தரணியாக செயற்பட வந்திருப்பது என்பது ஒரு பெரிய சதித்திட்டத்தின் ஆரம்ப புள்ளியாக கருதுகின்றோம்.

இவர்கள் இருவருக்கும் இடையிலான உறவானது இந்த நாட்டில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம் என்ற சந்தேகம் எங்கள் மத்தியில் எழுகின்றதுடன் இனிவரும் காலங்களில் இவர்கள் தொடர்பான பல தகவல்கள் வெளியிடப்படும் அதேவேளை இவர்கள் இருவரது செயற்பாடுகளின் பின்னால் பெரிய ஒரு சதிதிட்டம் இருப்பதாக கருதுகின்றோம்.

அதேவேளை மக்கள் இவர்களை அவதானித்துக் கொண்டிருக்கின்றனர்.

இன்று இடம்பெறும் கைதுகள் இவர்களால் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சில ஊழல்கள் கொலை குற்றச்சாட்டுக்கள் போன்ற விடயங்கள் காரணமாக சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது எனவே எந்த ஒரு அரசியல் நோக்கத்துக்காவும் இவர்களை கைது செய்யப்படவில்லை இவர்கள் கடந்த காலங்களில் வாக்குறுதிகளை வழங்கியிருந்தனர்.

அதனை நிறைவேற்றவில்லை என நாடாளுமன்றத்தில் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர் இன்று அவர்களது குற்றச்சாட்டுக்கள் ஊழல்கள் வெளிவந்த பின்னர் மீண்டும் அழுகுரலை காணக் கூடியதாக இருக்கின்றதுடன் அரசாங்கம் எங்களை அரசியல் பழிவாங்கல் செய்வதாக அலறிக் கொண்டிருக்கின்றனர் இது ஒரு சட்டரீதியான நடவடிக்கை இது தொடர்பான தகவல்கள் வெளிவரும்” என தெரிவித்துள்ளார். (ஐ)

# ஸ்டாலின் குடும்பத்துக்கு பலனளிக்கும் விண்வெளி தொழில் கொள்கை: அண்ணாமலை குற்றச்சாட்டு


8/3/24, 4:38 PM Ministry Of Corporate Affairs - MCA Services

**Ministry Of Corporate Affairs**

Date : 03-08-2024 4:38:38 pm

LLP Information

| | |
|---|---|
| LLPIN | ACI-4907 |
| LLP Name | VAANAM SPACE LLP |
| ROC Name | ROC Chennai |
| Date of Incorporation | 22/07/2024 |
| Email Id | [illegible] |
| Number of Partners | 0 |
| Number of Designated Partners | 2 |
| Registered Address | No. 63, Cathedral Road, Gopalapuram (Chennai), Chennai, Chennai, Tamil Nadu, India, 600086 |
| Total Obligation of Contribution | 1,00,000 |
| LLP Status | Active |
| Strike off/amalgamated/transferred date | - |
| Status under CIRP | No |

Accounts and Solvency Filing Information

| Date of filing | Financial Year |
|---|---|
| - | - |

Annual Returns Filing Information

| Date of filing | Financial Year |
|---|---|
| - | - |



தமிழக அரசின் விண்வெளி தொழில் கொள்கை, முதல்வர் ஸ்டாலின் குடும்பம் நலன் அடைவதற்காக உருவாக்கப்பட்டது என தமிழக பா.ஜ., முன்னாள் தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார்.

தமிழக அமைச்சரவை கூட்டம், முதல்வர் ஸ்டாலின் தலைமையில் நேற்று நடந்தது. இதில், பட்ஜெட் மற்றும் மானிய கோரிக்கை விவாதத்தில் அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மேலும், தொழில் துறை உருவாக்கியுள்ள விண்வெளி தொழில் கொள்கை - 2025க்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது.


இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அண்ணாமலை ஆதாரம் வெளியிட்டுள்ளார். இது குறித்து அவர் கூறியிருப்பதாவது: தமிழக முதல்வர் ஸ்டாலினின் மருமகன் விண்வெளி தொழில்நுட்ப ஸ்டார்ட்அப் நிறுவனத்தை தொடங்கியதிலிருந்து, தமிழக விண்வெளி தொழில்துறை கொள்கை எதிர்பார்க்கப்பட்டது.

சபரீசன், 22.07.2024 அன்று முதல் வானம் ஸ்பேஸ் எல்எல்பியின் நியமிக்கப்பட்ட பங்குதாரராக உள்ளார். இந்த நிறுவனம் 20% மூலதன மானியத்தைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுவதால், இந்த கொள்கையை கோபாலபுரம் குடும்பத்தின் தொழில் கொள்கை என்று அழைப்பது தான் பொருத்தமானதாக இருக்கும்.

தமிழகம் போதிய முதலீடுகள் இல்லாததால் பாதிக்கப்பட்டுள்ளது, 2025ம் நிதியாண்டில் புதிய முதலீடுகளுக்காக போராடி வருகிறது. இதோ ஒரு சர்வாதிகார அரசு தங்கள் குடும்பத்திற்கு பயனளிக்கும் வகையில் ஒரு தொழில் கொள்கையை வெளியிடுகிறது. அவமானம்!. இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார்.

(ஐ)

## நீர் மின் உற்பத்தியில் மத்திய அரசு இலக்கை மிஞ்சிய தமிழகம்



மத்திய அரசு, 2024 - 25ல், தமிழகத்தில், 400 கோடி யூனிட் நீர் மின் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்த நிலையில், அதை விட கூடுதலாக, 80 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

நீலகிரி, கோவை, ஈரோடு, திருநெல்வேலி மாவட்டங்களில் மின் வாரியத்திற்கு, 2,321 மெகா வாட் திறனில், 47 நீர் மின் நிலையங்கள் உள்ளன. மழை காலங்களில் அணைகளில் தேக்கப்படும் தண்ணீரை பயன்படுத்தி, நீர் மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

இதில், ஒரு யூனிட் மின் உற்பத்தி செலவு சராசரியாக, 75 காசாக உள்ளது. இருப்பினும், போதிய மழை இல்லாததால், தினமும் சராசரியாக, 750 - 1,000 மெகா வாட் மின்சாரம் மட்டும் உற்பத்தி செய்யப்படுகிறது.

மத்திய மின்சார ஆணையம், 2024 - 25ல், தமிழக நீர் மின் நிலையங்களில், 400 கோடி யூனிட் மின் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்திருந்தது. அந்தாண்டில் தென் மேற்கு பருவ மழைப் பொழிவு அதிகம் இருந்ததால், அணைகளுக்கு நீர்வரத்து அதிகம் இருந்தது.

இதையடுத்து, நீர் மின் நிலையங்களில், 480 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு உள்ளது. இது, 2023 - 24ல், 371 கோடி யூனிட்களாக இருந்தது. மத்திய அரசு நிர்ணயித்த இலக்கை விட, கடந்த ஆண்டில் கூடுதலாக, 80 கோடி யூனிட் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. (ஐ)




## மதுரையில் குடும்பத்துடன் விஷம் அருந்தி 2 பேர் தற்கொலை வறுமையால் விபரீத முடிவு

வறுமையின் காரணமாக குடும்பத்துடன் விஷம் அருந்திய 2 பேர் உயிரிழந்தனர். ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மதுரை அனுப்பானடி தாயுமான தெருவில் வசித்து வந்தவர் ஜீவகுமாரி. கணவரை இழந்த இவர் கூலி வேலைக்கு சென்று தனது குடும்பத்தை கவனித்து வந்துள்ளார். இந்த சூழலில், இதய நோயால் பாதிக்கப்பட்ட ஜீவகுமாரி மேற்கொண்டு வேலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இதனால், போதிய வருமானம் இல்லாமல், இவரது குடும்பம் வறுமையின் பிடியில் சிக்கியது.

இந்த நிலையில், குடும்பத்துடன் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்த ஜீவகுமாரி, தனது மகள் இன்பலட்சுமி மற்றும் மகன் சிங்கபெருமாளுடன் விஷம் குடித்துள்ளார். இது குறித்து தகவல் அறிந்த நிலையில், அக்கம்பக்கத்தினர் அவர்களை மீட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்க முயன்றனர். ஆனால், ஜீவகுமாரி, இன்பலட்சுமி பரிதாபமாக உயிரிழந்தனர். சிங்கபெருமாள் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இது தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மதுரையில் வறுமையின் காரணமாக குடும்பத்துடன் தற்கொலைக்கு முயன்று 2 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

(ஐ)

## மருதமலையில் ரூ.110 கோடியில் 184 அடி உயர முருகன் சிலை: அறநிலைய துறை அமைச்சர் சேகர்பாபு அறிவிப்பு

"மருதமலையில், 110 கோடி ரூபாயில், 184 அடி உயரத்தில் முருகன் சிலை அமைக்கப்படும்," என, ஹிந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு அறிவித்தார். கோவில்கள் சார்பில் இவ்வாண்டு, 1,000 ஜோடிகளுக்கு, நான்கு கிராம் தங்க தாலி உட்பட, 70,000 ரூபாய் மதிப்பில் சீர்வரிசைகள் வழங்கி, திருமணம் நடத்தி வைக்கப்படும்.

ஒரு கால பூஜை திட்டம், மேலும் 1,000 கோவில்களுக்கு விரிவுபடுத்தப்படும். இதற்காக, 25 கோடி ரூபாய் வழங்கப்படும்

அர்ச்சகர்கள், கிராமக் கோவில் பூஜாரிகள் நல வாரிய உறுப்பினராக உள்ள பூஜாரிகள், 10,000 பேருக்கு, இரு சக்கர வாகனம் வாங்க, தலா 12,000 ரூபாய் மானியம் வழங்கப்படும்.

சென்னை மயிலாப்பூர், பழனி, ஸ்ரீரங்கம் உள்ளிட்ட 10 கோவில்களில், திருவிழா நாட்களில், கட்டண தரிசனம் ரத்து செய்யப்படும் திருச்செந்துார், ஸ்ரீரங்கம், சமயபுரம், திருவண்ணாமலை, திருத்தணி, ஆனைமலை, பண்ணாரி, திருப்பரங்குன்றம், மருதமலை, பெரியபாளையம் ஆகிய கோவில்களுக்கு வரும் பக்தர்களின் பச்சிளம் குழந்தைகளுக்கு, காய்ச்சிய பசும் பால் வழங்கப்படும். பெரியபாளையம் பவானி அம்மனுக்கு, 8 கோடி ரூபாயில் தங்க கவசங்கள் செய்யப்படும்

இமயமலையில் உள்ள திருக்கயிலாய மானசரோவர் ஆன்மிக பயணம் செல்லும், 500 பக்தர்களுக்கு வழங்கப்படும் அரசு மானியம், 50,000 ரூபாயிலிருந்து, ஒரு லட்சம் ரூபாயாக அதிகரிக்கப்படும்.

நேபாளம், முக்திநாத் ஆன்மிக பயணத்திற்கான அரசு மானியம், 20,000 ரூபாயிலிருந்து, 30,000 ரூபாயாக அதிகரிக்கப்படும்.

கோவில் பணியாளர்களுக்கு வழங்கப்படும் இரு சக்கர வாகன கடன், 20,000 ரூபாயிலிருந்து, 50,000 ரூபாயாக அதிகரிக்கப்படும்.

கோவை, மருதமலை சுப்பிரமணியசுவாமி கோவிலில், 110 கோடி ரூபாயில், அருங்காட்சியகம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுடன், அறுங்கோண வடிவ புல்வெளி நில அமைவிற்கு மத்தியில், 184 அடி உயர முருகன் சிலை அமைக்கப்படும்.

ஈரோடு மாவட்டம், திண்டல் வேலாயுதசுவாமி கோவிலில், 30 கோடி ரூபாயில், 180 அடி உயர முருகன் சிலையும், ராணிப்பேட்டை மாவட்டம், குமரகிரி, திமிரி சுப்பிரமணியசுவாமி கோவிலில், 6.83 கோடி ரூபாயில், 114 அடி உயர முருகன் சிலையும் அமைக்கப்படும்.

திருச்செந்துார் சுப்பிரமணியசுவாமி கோவில் கடற்கரை பரப்பை, கடல் அரிப்பிலிருந்து தடுக்கும் திட்டம், 30 கோடி ரூபாயில் செயல்படுத்தப்படும் இவ்வாறு அமைச்சர் அறிவித்தார்.

(ஐ)



# தூக்கம் என்ன விலை?

ரேவதி பாலாஜி

அறை முழுவதும் பால் மணம். அதோடு சேர்ந்து குழந்தை சிறுநீர், மலம் கழித்திருந்த துணிகளின் மணம். துவைத்துக் காய்ந்திருந்த துணிகளில் டெட்டால் மணம்.

கண் விழித்துப் பார்த்தேன். அறை வெளிச்சமாக இருந்தது. ஓ சூரியன் வந்துவிட்டது. அதற்குள்ளே விடிந்துவிட்டதா? நான் இன்னும் தூங்கவே இல்லையே. தாய் ஆனதில் இருந்து தூக்கத்தையே தொலைத்துவிட்டேனே.

புதிய தாய்மார்களுக்கு உண்மையிலேயே தூங்க நேரம் இல்லையா?

பிறந்த புதிதில் பெரும் பொழுதுகளில் தூங்கத்தான் செய்தது குழந்தை. அப்பொழுது நம்மைப் பார்க்க வருபவர்கள் சொல்லும் அறிவுரை, குழந்தை தூங்கும்போது நீயும் உறங்கிக் கொள் என்று.

ஆனால் நம்மால் அந்த நேரத்தில் தூங்க முடிவதில்லையே எதனால்?

உடல் சோர்வாகத்தான் இருந்தது. கண்ணில் தூக்கம் அதிகமாகி எரிச்சலாக இருந்தது. பகலிலும் தூங்கவில்லை. நேரம் பன்னிரண்டைத் தாண்டி விட்டது

கண்களை மூடித் தூங்க முயற்சி செய்தேன். ஏதேதோ எண்ணங்கள் உள்ளுக்குள் பெருக்கெடுத்து ஓடின.

நான் அம்மா ஆகிவிட்டேனா- என்னால் நம்ப முடியவில்லையே- ஒரு குழந்தை வளர்த்து ஆளாக்கும் அளவிற்கு எனக்குப் பக்குவம் வந்து விட்டதா?

பக்கத்தில் ஒரு குட்டி உயிர் படுத்துக்கொண்டிருக்கிறது. தூக்கத்தில் தெரியாமல் மேலே கை போட்டு விட்டாள். ஐயோ பாவம் என் பிள்ளை.

அவளை விட்டுத் தள்ளியும் படுக்க முடியாதே, என் அரவணைப்பு அவளுக்கு வேண்டும்.

என்னென்னவோ யோசனைகளில் தூக்கம் என்னைத் தீண்டவே இல்லை.

மணி ஒன்று.. இரண்டு.. மூன்றை நெருங்கியது.

மெல்ல என்னை மீறித் தூக்கம் சொக்கியது.

“க்குவா.. க்குவா.. க்குவா”

மனம் எழச் சொன்னது. உடல் தூக்கத்திற்கு கெஞ்சுகிறது.

இவ்வளவு நேரம் கழித்து இப்போதுதான் உறங்கினேன் அதற்குள் மீண்டும் எழ வேண்டும்.

எழுந்து அமர்ந்து அவளைத் தூக்கி வைத்து பால் கொடுத்தேன். முதல் சில மாதங்களுக்கு நிச்சயம் படுத்துக்கொண்டே பால் கொடுப்பதைத் தவிர்க்கச் சொல்கிறார்கள் மருத்துவர்கள்.

பால் கொடுத்து தூங்க வைத்துவிட்டு நானும் உறங்கினேன்.

சில நிமிடங்களிலேயே மீண்டும் அழுகைச் சத்தம். எழுந்தேன் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டு தட்டிக் கொடுத்தேன். அழுகை நிற்கவில்லை. நடந்துகொண்டே தட்டிக் கொடுத்தேன். அரைமணி நேரப் போராட்டத்திற்குப் பின் உறங்கினாள். மீண்டும் அழுதால் என்னை எழுப்ப வேண்டாம், முடிந்த வரை சமாளியுங்கள் என்று அம்மாவிடம் சொல்லிவிட்டு உறங்கினேன்.

ஐந்து மணிக்குச் சொல்லிவிட்டுத் தூங்கினேன் ஆறு மணிக்கு மீண்டும் சத்தம் கேட்டு எழுந்தேன்.

“எவ்ளோ நேரமா தட்டிக் கொடுத்தேன். பசிக்கு அழுறாளோ என்னவோ

” என்று அம்மா என்னிடம் குழந்தையைக் கொடுத்தார்.

நானும் விழித்துக்கொண்டேன்.

அவள் தொடர்ந்து மூன்று மணி வரை தூங்கும் போது என்னுடைய மனநிலை மாற்றங்களால் என்னால் தூங்க முடியவில்லை. எனக்குத் தூக்கம் வரும்போது அவள் என்னைத் தூங்கவிடவில்லை.

இரவில் மூன்று மணி நேரம்கூடத் தூங்காததால் நாள் முழுவதும் சோர்வாகவே இருந்தது.

இனி இப்படி இருக்கக் கூடாது, நானும் நேரம் கிடைக்கும் போது தூங்க வேண்டும் என நினைத்தேன்.

அடுத்த நாள் இரவு பன்னிரண்டு மணி.நான் ஒரு பெண்ணைப் பெற்ற தாய் ஆகிவிட்டேனா!



எப்படி என் குழந்தையை வளர்க்கப் போகிறேன் என்கிற கேள்வியும் சிந்தனையும் எனக்குள் எழுந்தன.

என் மகளை அறிவோடும் நல்ல ஆரோக்கியத்துடனும் வளர்க்க வேண்டும். அவளை நன்கு படிக்க வைக்க வேண்டும். அவள் அறிவுக்கும் திறமைக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அவள் எந்தத் துறையில் சாதிக்க நினைக்கிறாளோ அதில் பயணிக்க அனுமதிக்க வேண்டும்.

அது சரி, அவள் விருப்பப்படும் படிப்பிற்காக வெளியூர் செல்ல நேர்ந்தால் என்ன செய்வது?

நானும் அவளோடு துணைக்குச் செல்வேன். அவள் அறிவையும் திறனையும் வளர்க்க நினைக்கும் என்னால் ஏன் அவளைச் சுதந்திரமாகப் பயணிக்க அனுமதிக்க முடியவில்லை?

ஏன் அனுமதிக்கக் கூடாது? எது சரி, எது தவறு, எது நெறி என்பதை அவளுக்குள் அறிவாகப் புகுத்தி விட்டாள். அவளே சுயமாகச் சிந்தித்து யாரையும் சார்ந்து இல்லாமல் வாழட்டுமே.

என் கண்களில் வைத்து காக்கும் அவளுக்கு ஏதாவது

> **சில நிமிடங்களிலேயே மீண்டும் அழுகைச் சத்தம். எழுந்தேன் குழந்தை யைத் தூக்கி வைத்துக் கொண்டு தட்டிக் கொடுத்தேன். அழுகை நிற்கவில்லை. நடந்து கொண்டே தட்டிக் கொடுத்தேன். அரைமணி நேரப் போராட்டத்திற்குப் பின் உறங்கினாள். மீண்டும் அழுதால் என்னை எழுப்ப வேண்டாம், முடிந்த வரை சமாளியுங்கள் என்று அம்மாவிடம் சொல்லிவிட்டு உறங்கினேன்.**
> **ஐந்து மணிக்குச் சொல்லிவிட்டுத் தூங்கினேன் ஆறு மணிக்கு மீண்டும் சத்தம் கேட்டு எழுந்தேன்.**

ஒன்று என்றால் என்னால் எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்? எப்படி அவளை நான் தனியாக வெளியே அனுப்பி வைத்துவிட்டு நிம்மதியாக இருக்க முடியும்?

பாலியல் துன்புறுத்தலில் அச்சுறும் பெண்களின் நிலைமையை இன்னும் ஏன் நம்மால் மாற்ற முடியவில்லை? பெண் பிள்ளையின் பெற்றோராகத் தேவையற்ற யோசனைகள் வந்து என்னை வருத்தியது.

பாதுகாப்பு இல்லாத சூழலால் அவளைக் குடும்ப வாழ்க்கைக்குள் புகுத்திவிடுவேனோ? இத்தனை வயதிற்குள் கல்யாணம் முடிய வேண்டும், இத்தனை வயதிற்குள் குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும். இப்பேர்பட்ட வாழ்க்கைக்குள் அவளையும் திணிப்பதா?

பெண் பிள்ளைகளை வளர்ப்பது இவ்வளவு கடினமானதாக இருக்கின்றதா? பெண் பிள்ளையின் தாய்கள் இன்னும் தங்கள் மகள்களை வளர்ப்பதில் இவ்வளவு சிரமங்களுக்கு உள்ளாகின்றனரா!

நேரம் அதிகாலை நான்கு மணி.

நான் மட்டும் ஏன் இந்த இரவில் அமர்ந்து இப்படியெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். இப்போது இதையெல்லாம் யோசித்து என்ன நிகழ போகிறது? திடமான மனதுடன் இருக்க வேண்டும் வலிமையுடன் எதிர்கொள்ள வேண்டும். கற்பனையாக ஒன்றை நினைத்துக் கொண்டு பயம் கொள்ளக் கூடாது. எப்படியோ மனதைத் தேற்றிக்கொண்டு தூங்குவதற்குள் அன்றும் விடிந்துவிட்டது.

இப்படிச் சில நாட்கள். பின் இரவில் அவள் செய்கைகளைக் கவனித்துக் கொண்டு இருப்பேன். ஏன் தூக்கத்தில் அவள் இப்படிக் குறட்டை விடுகிறாள் இது சரியா என்று இணையத்தில் தேடினேன். ஏன் அவள் இத்தனை முறை நீர் மாதிரி மலம் கழிக்கிறாள் அது சரியா என்று அதையும் இணையத்தில் தேடினேன்.

இப்படி ஏதேதோ பயங்களை இணையத்தில் தேடிப் பார்த்தேன். அதில் வரும் பதில்கள் மேலும் நம்மை வாட்டத்தான் செய்தன.

மருத்துவரிடம் கேட்டால் அவரே ஒன்றும் பிரச்சினை இல்லை என்றுதான் கூறுவார். ஆனால் இந்த இரவில் இப்படி அமர்ந்து எதையாவது தேடிக்கொண்டிருக்க மனம் அலைகிறது.

(7ஆம் பக்கம் பார்க்க..)

# அமெரிக்கா விட்டுச் சென்ற நவீன ஆயுதங்கள் கள்ளச் சந்தையில் பயங்கரவாதிகளுக்கு விற்பனை



ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படையினர் விட்டுச் சென்ற அதிநவீன ஆயுதங்கள், கள்ளச் சந்தையில் பயங்கரவாதிகளுக்கு விற்பனை செய்யப்படுவது அம்பலம் ஆகியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி நடை பெற்று வருகிறது. அங்கு பங்வேறு கிளர்ச்சி அமைப்புகள் செயல்பட்டு வருகிறது. கடந்த 2021ம் ஆண்டு தலிபான் முன்னேறிய வேளையில், ஆப்கானிஸ்தான் வீரர்கள் சிலர் சரணடைந்தனர். மற்றவர்கள் தங்கள் ஆயுதங்கள் மற்றும் வாகனங்களுடன் தப்பிச் சென்றனர்.

அதேபோல், ஆப்கனை விட்டு வெளியேறிய அமெரிக்க ராணுவமும் ஆயுதங்கள் அதிநவீன ராணுவ உபகரணங்களை அங்கேயே விட்டுச் சென்றது. தற்போது ராணுவ உபகரணங்கள் மற்றும் பாதி ஆயுதங்கள் காணாமல் போகி உள்ளது தெரியவந்தது. இந்நிலையில், அமெரிக்க படையினர் விட்டுச் சென்ற அதிநவீன ஆயுதங்கள், கள்ளச் சந்தையில் பயங்கரவாதிகளுக்கு விற்பனை செய்யப்படுவது அம்பலம் ஆகியுள்ளது.

நவீன துப்பாக்கிகள், இலகுரக ஆயுதங்கள் தான் இவற்றில் அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றன. ஆயுதங்களை கைப்பற்றிய தலிபான் படையினரும், வேறு சில கிளர்ச்சி படையினரும், அவற்றை கள்ளச் சந்தையில் விற்பனை செய்து கொள்ளை லாபம் பார்த்து வருகின்றனர்.

கவச வாகனங்கள், ஹெலிகாப்டர் போன்றவை தொழில்நுட்பம் தெரிந்த பணியாளர்கள் இல்லாத காரணத்தால், பயன்படுத்த முடியாத நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்த ஆயுதங்களை மீட்க வேண்டும் என்று அதிபர் டிரம்ப் அவ்வப்போது குரல் கொடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

ஆயுத விற்பனை குறித்து தாலிபன் அரசின் துணை செய்தித் தொடர்பாளர் ஹமீதுல்லா கூறியதாவது: அமெரிக்கா விட்டுச் சென்ற ஆயுதங்கள் மற்றும் நவீன ராணுவ உபகரணங்களை நாங்கள் மிகுந்த கவனத்துடன் பாதுகாக்கிறோம். ஆயுதங்கள் கடத்தப்படுவதாகவும், காணாமல் போவதாகவும் கூறுவது தவறானது. அனைத்து இலகுரக மற்றும் கனரக ஆயுதங்களும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# என்.ஐ.ஏ.,வால் தேடப்படும் பயங்கரவாதி அமெரிக்காவில் கைது

பல்வேறு தாக்குதல்களில் தொடர்புடைய, இந்தியாவில் தேடப்படும் பயங்கரவாதியை அமெரிக்க பொலிசார் கைது செய்துள்ளனர்.

கடந்த ஆண்டு சண்டிகரில் உள்ள வீட்டில் நடத்தப்பட்ட குண்டு வீச்சில் தொடர்புடைய ஹேப்பி பாசியா என்று அழைக்கப்படும் ஹர்ப்ரீத் சிங்கிற்கு எதிராக, கடந்த ஜனவரி மாதம் ஜாமினில் வெளிவர முடியாத பிடிவாரண்ட்டை என்.ஐ.ஏ., பிறப்பித்தது.

தலைமறைவாக இருக்கும் ஹேப்பி பாசியாவுக்கு ஏற்கனவே, பஞ்சாப்பில் நடத்தப்பட்ட 14 குண்டு வீச்சு தாக்குதல்களில் தொடர்பு உள்ளது. கடந்த 7 மாதங்களில் பா.ஜ., தலைவர் மனோராஞ்சன் கலியா உள்பட அரசியல் தலைவர்கள், பிரபலங்களின் வீடுகள் மீது தாக்குதல், போலீஸ் நிலைகள் மற்றும் வழிபாட்டு தலங்களின் மீதும் தாக்குதலை நடத்தியுள்ளார். காலிஸ்தான் தீவிரவாத அமைப்பான, பப்பர் கல்சா இன்டர்நேஷனல் அமைப்புடன் தொடர்புள்ள ஹேப்பி பாசியா குறித்து தகவல் அளித்தால் ரூ.5 லட்சம் சன்மானத்தை என்.ஐ.ஏ., அறிவித்திருந்தது. இந்த நிலையில், என்.ஐ.ஏ.,வால் தேடப்படும் பயங்கரவாதியான ஹேப்பி பாசியாவை அமெரிக்காவில் குடிவரவு மற்றும் சுங்க அமலாக்கத்துறை அதிகாரிகள் கைது செய்தனர். அவரை இந்தியாவுக்கு அழைத்து வந்து விசாரிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)



# பிணைக்கைதிகள் அனைவரையும் விடுவிக்க தயார்: ஹமாஸ் அறிவிப்பு

"காசா போரை முடிவுக்கு கொண்டு வர மீதமுள்ள பிணைக்கைதிகள் அனைவரையும் விடுவிக்க தயார்" என ஹமாஸ் தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனத்தின் காசா பகுதியை கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் பயங்கரவாதிகள், மேற்காசிய நாடான இஸ்ரேலுக்குள் நுழைந்து, 2023 அக்டோபரில் தாக்குதல் நடத்தினர். இதில் 1,200 பேர் கொல்லப்பட்டனர் 200 பேரை பிணைக்கைதிகளாக கடத்திச் சென்றனர்.

இதற்கு பதிலடியாக 15 மாதங்களாக இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், காசாவில் 48,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அமெரிக்கா மற்றும் ஐ.நா.,வின் முயற்சியால் இரு தரப்பிற்கும் இடையே கடந்த ஜன., 19 முதல் 42 நாட்களுக்கு முதற்கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் அமல் செய்யப்பட்டது.

அப்போது, இரு தரப்பிலும் பிடித்து வைக்கப்பட்டிருந்த பிணைக்கைதிகள் சிலர் விடுவிக்கப்பட்டனர். கைது செய்யப்பட்டு உயிரிழந்தவர்களின் உடல்களும் ஒப்படைக்கப்பட்டன. இருப்பினும், போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதாக இருதரப்பும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டின. காசா நகர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் இஸ்ரேல் அவ்வப்போது வான்வழி தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்நிலையில், "காசா போரை முடிவுக்கு கொண்டு வர மீதமுள்ள பிணைக்கைதிகள் அனைவரையும் விடுவிக்க தயார்" என ஹமாஸ் தெரிவித்துள்ளது. இது குறித்து ஹமாஸ் அமைப்பின் மூத்த தலைவர் கலீல் அல் ஹயா கூறியதாவது: அரசியல் காரணங்களுக்காக தற்காலிக போர் நிறுத்தங்களை இஸ்ரேல் கையில் எடுக்கிறது.

இதற்கு இனி ஹமாஸ் ஒப்புக்கொள்ளாது. போரை முழுமையாக முடிவுக்கு கொண்டு வர இஸ்ரேல் ஒப்புக்கொண்டால் மட்டுமே மீதமுள்ள பிணைக்கைதிகள் 59 பேரை விடுவிப்போம். இவ்வாறு அவர் கூறினார். இதற்கு இஸ்ரேல் ஒப்புக்கொள்ளும் பட்சத்தில் ஹமாசுக்கு எதிராக காசாவின் போர் விரைவில் முடிவுக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமெரிக்கா புளோரிடா பல்கலையில் துப்பாக்கிச்சூடு: 2 பேர் உயிரிழப்பு

அமெரிக்காவின் புளோரிடா மாகாண பல்கலை.யில் நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் இருவர் பலியாயினர். அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் புளோரிடா ஸ்டேட் பல்கலை. உள்ளது. இங்குள்ள வளாகத்தில் நேற்று திடீரென துப்பாக்கிச்சூடு சம்பவம் நடந்தது. இதில் இரண்டு பேர் பலியாயினர். 6 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் இருவர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த துப்பாக்கி சூடு சம்பவம் குறித்து மத்திய புலனாய்வு அமைப்பான எப்.பி.ஐ.,யும் விசாரணையில் ஈடுபட் டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)



# கத்திமுனையில் விமானத்தை கடத்திய நபர் நடுவானில் சுட்டுக்கொலை

மத்திய அமெரிக்க நாடான பெலிஸ் எல்லையில் உள்ள கோரோஷல் எனும் சிறிய நகரில் இருந்து சுற்றுலா தலமான சான் பெட்ரோவுக்கு 14 பயணிகள் மற்றும் 2 விமானிகளுடன் சிறிய ரக விமானம் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தது.

24 டன் ரேஷன் அரிசி பறிமுதல் திடுக்கிடும் தகவல்கள் அம்பலம்

விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்த போது, திடீரென கத்திமுனையில் ஒருவர் விமானத்தை கடத்தினார். தன்னை இந்த நாட்டை விட்டு வெளியே கொண்டு சென்று விடுமாறு கோரிக்கை விடுத்தார். இதனால், விமானத்தில் பதற்றம் நிலவியது.

அப்போது, சுதாரித்துக் கொண்ட பயணிகளில் ஒருவர், தன்னிடம் இருந்த துப்பாக்கியால், அந்த நபரை சுட்டுக்கொன்றார். இந்த சம்பவத்தால் சுமார் 2 மணிநேரம் விமானம் வானில் வட்டமடித்து கொண்டிருந்தது. பிறகு பொலிசாருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

இது குறித்து போலீசார் நடத்திய விசாரணையில், விமானத்தை கடத்த முயன்றது அமெரிக்காவைச் சேர்ந்த அகின்யேலா சாவா டெய்லர் என்பது தெரிய வந்தது. இந்த கடத்தல் சம்பவத்தின் போது, விமானி உள்பட 3 பேரை அவர் கத்தியால் குத்தி யுள்ளார்.

அதன்பிறகு, சுற்றுலா பயணி தன்னிடம் இருந்து லைசென்ஸ் பெற்ற துப்பாக்கியால், அந்த நபரை சுட்டுக் கொன்றது தெரிய வந்துள்ளது. (ஐ)

## மாபெரும்...

ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக 18 ஆண்டுகளின் பின்னர், கடந்த 8 ஆம் திகதி கைது செய்யப்பட்ட சிவநேசத்துரை சந்திரகாந்தன் தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். பிள்ளையானின் சட்டத்தரணி என்ற ரீதியில் அவரை பிவிருது ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில நேரில் பார்வையிட்டுப் பேசியுள்ளார்.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட உதய கம்மன்பில, “விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து விலகி, நாட்டைப் பாதுகாப்பதற்காக இராணுவத்துடன் இணைந்து போராடியவர்தான் பிள்ளையான். அவர் தேசப்பற்றாளர் என்ற அடிப்படையிலேயே அவருக்காக முன்னிலையானேன்.” - என்று கூறியிருந்தார்.

உதய கம்மன்பிலவின் கூற்றுக்கு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ பதில் வழங்கும்போது, “கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் மிகப்பெரும் குற்றவாளி. அவரைத் தேசப்பற்றாளர் என்று உதய கம்மன்பில கூறுவது வெட்கக்கேடானது. பிள்ளையான் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பில் நீதிமன்றம் விசாரணை நடத்தி உரிய தண்டனையை வழங்கும். அதேபோல் உதய கம்மன்பிலவும் நல்லவர் அல்லர். அவரும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டவர். நீதிமன்றங்களில் அவருக்கு எதிரான வழக்குகள் நிலுவையில் உள்ளன.” - என்றார்.

## காதலன்....

யாழ். தென்மராட்சி, வரணி பகுதியைச் சேர்ந்த 18 வயது யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வரணி பகுதியில் உள்ள குளமொன்றில் இருந்து நேற்று 23 வயது இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

குளத்தில் தாமரைப் பூ பறித்தபோது அவர் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

அந்த இளைஞரின் மரண செய்தியை அறிந்த 18 வயதான காதலி இன்று அதிகாலை வீட்டில் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

சுட்டிபுரத்துக்கு அருகிலுள்ள குளமொன்றில் இளைஞரின் சடலம் மிதப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சடலம் மீட்கப்பட்டு, பிரேத பரிசோதனைக்காகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனை இன்று இடம்பெறவுள்ளது.

## எம்மை....

மட்டுமல்ல நாடெங்கிலும் வாழும் தமிழ் மக்கள், கடந்த இரண்டு பிரதான தேர்தல்களிலும் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்துள்ளார்கள். இறுதியாக நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள், எமது கட்சிக்கு அமோக ஆதரவு வழங்கினார்கள். அதேபோல் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் தமிழ் மக்கள் எமது கட்சிக்குப் பேராதரவு வழங்குவார்கள் என்று நம்புகின்றோம்.

எமது கட்சியை நம்பி வாக்களித்த தமிழ் மக்களை நாம் ஒருபோதும் கைவிடமாட்டோம். நாட்டில் இனவாதம், மதவாதம் இல்லாத ஒரேயொரு கட்சியே தேசிய மக்கள் சக்தி. அதனால்தான் தமிழ் மக்கள் எமது கட்சிக்கு அமோக ஆதரவு வழங்குகின்றார்கள். அவர்களின் எதிர்பார்ப்புக்களை நாம் நிறைவேற்றியே தீருவோம். இந்த நாட்டில் சிங்கள மக்களைப் போல் தமிழ், முஸ்லிம் மக்களும் சகல உரிமைகளுடன் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதே எமது விருப்பம்.” - என்றார்.

## பொலிஸ்...

முன்தினம் புதன்கிழமை மாலை இளைஞர் ஒருவரின் சடலம் இரத்தக்கறைக் காயங்களுடன் மீட்கப்பட்டிருந்தது.

சடலமாக மீட்கப்பட்டவர் கடந்த புதுவருட தினமன்று காணாமல்போயிருந்த வவுனியா, விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த கோபிதாசன் (வயது 33) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டிருந்தது.

மேற்படி இளைஞர் புதுவருட தினத்தன்று (திங்கட்கிழமை) காலை வீட்டில் இருந்து சென்றார் என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர். அதன் பின் காலையில் சூடுவெந்தபுலவு வீதியில் நின்றார் எனவும், தமது கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்றபோது, மரணமடைந்த இளைஞர், “என்னைச் சிலர் தாக்குகின்றனர். இது தொடர்பில் உளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் போகின்றேன். எனவே, பொலிஸ் நிலையத்தில என்னை இறக்கி விடுங்கள்:” - என்று கோரியுள்ளார் எனவும் உறவினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதனையடுத்து மேற்படி இளைஞர் உளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் இறக்கி விடப்பட்டார் எனவும், அவர் பொலிஸ் நிலையத்துக்குள் சென்றார் எனவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன்பின் அவரைத் தேடியும் கிடைக்காத நிலையில் இரண்டு தினங்களின் பின் கடந்த புதன்கிழமையே அவர் சடலமாக மீட்கப்பட்டார் என்றும் உறவினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கொலைக் குற்றவாளிகளைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்றும் உறவினர்கள் தமது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளனர்.

## வாக்குறுதிகளில்....

உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இவர்கள் ஆட்சிக்கு வர முன்னர் வழங்கிய வாக்குறுதிகளில் தமிழ் மக்களுக்கு ஒன்றையேனும் நிறைவேற்றி உள்ளனரா எனக் கேள்வி எழுப்பியுள்ள கஜேந்திரகுமார் எம்.பி., மதவாதம், இனவாத ரீதியாகச் செயற்படுகின்ற இனவாதிகள் என்றும் அநுர தரப்பை அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம், கொக்குவிலில் உள்ள தமது கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று மாலை நடத்திய ஊடக சந்திப்பின்போது நேற்று யாழ். வந்த ஜனாதிபதி ஆற்றிய உரை தொடர்பில் கஜேந்திரகுமார் எம்.பி. கடுமையாக விமர்சித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

“ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும் அதேபோல் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னரும் பல்வேறு வாக்குறுதிகளை அநுர தரப்பினர் வழங்கியிருந்தனர்.

அதிலும் தமிழ் மக்கள் விடயத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கம், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கும் தீர்வை ஏற்படுத்துவதாக அவர்கள் கூறியிருந்தனர்.

ஆனால், ஆட்சிக்கு வந்து ஐந்து மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் தமிழ் மக்களின் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வை அவர்கள் ஏற்படுத்தவில்லை. இதுமட்டுமல்லாது இவற்றுக்குத் தீர்வைக் காண்பதற்கு எந்தவித முயற்சிகளையும் அவர்கள் எடுக்கவில்லை.

இவ்வாறாக மக்களை ஏமாற்றித் தொடர்ந்தும் மேடைகளில் ஏறி தம்மைப் புனிதர்களாகக் காட்டி ஏமாற்று வித்தைகளையே அநுர தரப்பினர் செய்து வருகின்றனர்.

தையிட்டி விகாரை விவகாரத்திலும் அரசியல்வாதிகளின் தலையீடு இருப்பதாக ஜனாதிபதி அநுர கூறியிருக்கின்றார். தற்போதும் தாமே அதிகாரத்தில் இருக்கின்ற நிலைமையில் முதலில் அந்தப் பிரச்சினைக்கு அவர் உடனடியாகத் தீர்வைக் காண வேண்டும்.

அதைவிடுத்து தமிழ் மக்கள் விடயத்தில் எதனையும் செய்யாமல் மக்களை ஏமாற்றும் வகையில் மேடைகளில் ஏறி வேறு யார் மீதும் பழியைப் போட்டுவிட்டு தாம் தப்பிக்க முயலக் கூடாது. எனவே, தையிட்டி விகாரைப் பிரச்சினைக்கு இதயசுத்தியுடன் உடனடியாகத் தீர்வை ஏற்படுத்தத் தாயாரா என ஜனாதிபதியிடம் கேட்கின்றோம்.

மேலும் இனவாதத்துக்கு இடமில்லை என்றும், இனவாதத்துக்குத் தாம் இடமளிக்க மாட்டோம் என்றும் கூறுகின்ற ஜனாதிபதி, இனவாத, மதவாத ரீதியாகப் பரப்புரையைத் தாங்கள் செய்ததை மறக்கக்கூடாது.

தமிழ் மக்கள் விடயத்தில் எப்போதும் இனவாத, மதவாத ரீதியாகச் செயற்படுவது தேசிய மக்கள் சக்தி என்ற ஜே.வி.பி.தான். அந்தக் கட்சியைச் சார்ந்த ஜனாதிபதியின் செயற்பாடுகளும் அவரது பேச்சுக்களும் இனவாதம்தான். அவர்களே உண்மையில் இனவாதிகள்.” - என்றார்.

## மனித....

*இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.*

*இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ளவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் சார்பில் அதன் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரியவினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.*

*அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-*

*“ஐரோப்பிய ஒன்றியத்தால் நாட்டுக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்வதற்கு எவ்வித அரசியல் வேறுபாடுகளுமின்றி சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந்த வரிச்சலுகை வழங்கல் குறித்த மீளாய்வுக்காக ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவினர் நாட்டுக்கு வருகை தரவுள்ள நிலையில், பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் ஆகிய விடயங்களில் அரசு நம்பத்தகுந்த முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டும்.*

*பயங்கரவாதத் தடைச் சட்டமானது தவறான முறையில் பிரயோகிக்கப்படுவதாகவும், அதனூடாக அத்துமீறல்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.*

*தற்போது நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ள குழு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளாய்வு செய்து வருகின்றது. அந்தக் குழுவின் பரிந்துரைகள் எவ்வித தாமதமுமின்றி உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், இந்த விடயம் தொடர்பில் பரந்துபட்டதும், சகலரையும் உள்ளடக்கியதுமான பொதுக்கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட வேண்டும்.*

*அதேபோன்று 2024 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க நிகழ்நிலைக்காப்பு சட்டமும் ஊடகவியலாளர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கடும் எதிர்ப்புக்கு உள்ளானது. இந்தச் சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட சில தீர்மானங்கள் இலங்கையின் நன்மதிப்பை மேலும் சிதைத்தது. இவ்வாறான கரிசனைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும்போது அரசியல் தன்முனைப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை என்பன பேணப்படுவது அவசியமாகும்.*

*அதேபோன்று தேர்தல் பிரசாரத்தின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் வாக்குறுதியளிக்கப்பட்டமைக்கு அமைவாக புதிய அரசமைப்பொன்று கொண்டுவரப்படும் என வடக்கு, கிழக்கு மக்கள் நம்பிக்கையுடன் இருக்கின்றனர்.*

*இந்த விடயத்தில் அநேகமான நடவடிக்கைகள் எட்டாவது நாடாளுமன்றத்திலேயே பூர்த்திசெய்யப்பட்டுவிட்டன. குறுகிய காலத்தில் அடையப்படக்கூடிய விடயங்கள் மாத்திரமே எஞ்சியிருக்கின்றன. எனவே, தற்போது இதனைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான திட்டமும், தெளிவான காலவரையறையுமே அவசியமானதாக இருக்கின்றன. மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும்.” – என்றுள்ளது.*

# தூக்கம் என்ன விலை?......

பகல் நேரத்தில் தூங்கலாம் என்றால் அவளைத் தொடர்ந்து ஒரே நேரத்தில் பகலில் தூங்க வைக்கப் பழகிய பின் அந்த நேரத்தில்தான் நான் என் சுய வேலைகளைச் செய்துகொள்ள வேண்டும்.

காலையில் பதினோரு மணிக்கு அவளைக் குளிக்க வைத்துத் தூங்க வைத்துவிட்டுதான் நான் குளிக்கச் செல்ல முடியும்.

குளித்து முடித்துச் சாப்பிட்டுவிட்டுத் துணிகளைத் துவைத்து முடித்து படுப்பதற்குள் தூங்கும் குழந்தை எழுந்தேவிடும்.

ஒரு சில நாட்களில் அவள் தூங்கும்போது தான் புத்தகம் படிக்கவோ வேறு ஏதாவது பிடித்த வேலைகளைச் செய்யவோ மனம் தூண்டும். அவள் விழித்திருக்கும் போது புத்தகம் படித்தால் ஏற்றுக்கொள்வார்களா? அப்புறம் நான் எப்பொழுதுதான் எனக்குப் பிடித்ததைச் செய்வது?

அவளுக்கு ஆறு மாதங்கள் ஆன பின் அவளுக்கான உணவு தயார் செய்ய அவள் காலையில் தூங்கும் நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டேன். எளிய உணவு வகைகள்தான், ஆனால் அவளுக்காகப் பார்த்துப் பார்த்துச் செய்ய நேரம் எடுத்துக் கொண்டேன். ஒன்றை ஒதுக்கினால் இன்னொன்றைக் கொடுக்க அடுத்த உணவையும் தயார் செய்ய வேண்டும்.

நாட்கள் செல்ல செல்ல அவர்கள் கொஞ்சம் வளர்ந்து சேட்டைகள் செய்யத் தொடுங்கும் போது இரவில் தூங்க வைப்பதற்குள் நம் முழு சக்தியும் தீரும் அளவிற்குச் சோர்வாகிவிடும் உடல். அப்போதும் நாம் நினைத்த நேரத்தில் தூங்க முடியாது.

ஏன் எல்லாவற்றையும் பெரிதாகப் பேசுகிறாய்.. குழந்தை பெற்றால் என்ன.. கிடைக்கும் நேரத்தில் தூங்கலாம் என்கின்றனர் பலர்.

என்னால் மட்டும்தான் முடிவதில்லையோ எனக் குழப்பம் நேர்ந்தது.

மனநிலை, சூழல், குடும்பத்தின் உதவி இதைப் பொறுத்து ஒவ்வொரு புதிய தாயின் தூக்கமும் வேறுபடலாம். ஆனால் பொதுவாகத் தாயான பின், வேண்டிய நேரத்தில் தூங்க முடியாமல் தவிப்பதுதான் நிஜம். ஒரு சில நாட்களில் அப்படி எப்போதாவது அரிதாக நேரம் கிடைக்கிறது. ஆனால், பெரும்பாலான நேரத்தில் தேவையான அளவிற்குத் தூங்க முடிவதில்லை என்பதுதான் நிதர்சன உண்மை.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி18.04.2025 இல் வெளியிடப்பெற்றது.